**சுருக்கம்**

சுற்றுலா – 2011–2012 மாநில அரசு திட்டம் – மானியக் கோரிக்கை அறிவிப்பு – திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோவில், ஜாம்புவானோடை தர்கா மற்றும் முத்துப்பேட்டை லகூன் வனப்பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் – நிர்வாக அனுமதி – ரூ.103.98 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு3)த் துறை**

அரசாணை (நிலை) எண்.224 நாள்:26.11.2011

(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–10)

**படிக்க:–**

சுற்றுலா ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.6392/திமவ/2011, நாள்:19.9.2011.

––––––

**ஆணை:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் 30.08.2011 அன்று, சட்டமன்றப் பேரவையில் 2011–2012ம் ஆண்டிற்கான சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

***“திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள பிரசித்தி மிக்க இராஜகோபாலசுவாமி கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கோவிலுக்கு அருகில் தங்கும் அறை, தெரு விளக்குகள் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்படும். மேலும், முத்துப்பேட்டை ஒன்றியத்தில் ஜாம்புவானோடை என்ற கடற்கரைக் கிராமத்தில் உள்ள தர்காவிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மேலும் முத்துப்பேட்டை கழிமுகத்துவாரத்திற்கு (லகூன்) அருகில் பறவைகள் சரணாலயம் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இந்தப் பகுதியிலும் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்”.***

2. மேலே பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பின்படி, சுற்றுலா ஆணையர், மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோவில், மன்னார்குடி, ஜாம்புவானோடை தர்கா மற்றும் முத்துப்பேட்டை லகூன் வனப்பகுதிகளில் ரூ.103.98 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் அனுப்பியிருந்ததாகவும், அம்மதிப்பீட்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்:–

| எண் | வ. எண் | திட்டத்தின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **1** | **அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோவில், மன்னார்குடி** | | |
| | 1 | பக்தர்கள் ஓய்வறை கட்டும் பணி | 22.50 |

| | | | |
|---|---|---|---|
| | 2 | பக்தர்கள் பொருள் பாதுகாப்பு அறை | 10.10 |
| | 3 | கழிப்பறை மற்றும் குளியலறை கட்டுதல் | 12.50 |
| | | **மொத்தம்** | **45.10** |
| **2** | **முத்துப்பேட்டை ஜாம்புவானோடை தர்கா** | | |
| | 1 | இரண்டு கழிப்பறைகள் கட்டுதல் | 19.44 |
| | 2 | வாகன நிறுத்துமிடம் | 5.44 |
| | | **மொத்தம்** | **24.88** |
| **3** | **முத்துப்பேட்டை லகூன்** | | |
| | 1 | படகுகள் நிறுத்துமிடம் – இரண்டு | 1.60 |
| | 2 | சளிச்சமேடு பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்காக ஓய்வுக் கூடம் கட்டுதல் – இரண்டு | 5.00 |
| | 3 | சரபுன்னை காடுகளில் சுற்றுலாப் பயணிகளுக்காக இரண்டு இடங்களில் நடைபாதை அமைத்தல் | 10.70 |
| | 4 | நுழைவு சீட்டு வழங்கும் அறை கட்டுதல் | 2.75 |
| | 5 | படகுகள் வாங்குதல் (2 எண்ணிக்கை) | 5.00 |
| | 6 | 2 படகுகள் ஓட்டுநர்கள் கூலி (6 மாதங்களுக்கு) | 0.70 |
| | 7 | 2 படகுகள் சுத்தம் செய்பவர்கள் கூலி (6 மாதங்களுக்கு) | 0.60 |
| | 8 | 2 படகுகளுக்கு எரிபொருள் செலவினம் | 3.20 |
| | 9 | உயிர்காப்பு சாதனங்கள் (Life Jacket) 20 | 2.00 |
| | 10 | விளம்பர பலகைகள் மற்றும் விழிப்புணர்வு முகாம் | 2.45 |
| | | **மொத்தம்** | **34.00** |
| | | **பெரு மொத்தம்** | **103.98** |

3. திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துருவினை ஏற்று, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மேலே பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களுக்கும் மொத்த திட்ட மதிப்பீடான ரூ.103.98 இலட்சத்தினை (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும், இத்தொகையை பெற்று திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடம் வழங்க, அனுமதி வழங்குமாறும், மேற்கண்ட பணிகளை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் செயல்படுத்த அனுமதி வழங்குமாறும் சுற்றுலா ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின்னர், மேலே பத்தி 2–3ல் உள்ள சுற்றுலா ஆணையரின் கருத்துருவை ஏற்று, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் 2011–2012 மானியக் கோரிக்கை அறிவிப்புகளில் இடம்பெற்றுள்ள, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோவில், ஜாம்புவானோடை தர்கா மற்றும் முத்துப்பேட்டை கடற்கரைக்காயல் வனப்பகுதி ஆகிய இடங்களில், மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுற்றுலா அடிப்படை வசதிக்கான பணிகளை, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் ரூ.103.98 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> 5452–சுற்றுலா குறித்த மூலதனச் செலவு–01–சுற்றுலா அடிப்படை வசதிகள்–101–சுற்றுலாத் தலங்கள் –பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KV - சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் –16–பெரும்பணிகள். (த.தொ.கு 5452 01 101 KV 1604).

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று, திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கிட சுற்றுலா இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.255/DS(KM)/கல்வி–II/2011, நாள்:04.11.2011–ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வி.கு. ஜெயக்கொடி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை–2.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக)
மாநில கணக்குத் தலைவர், சென்னை –9/18.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாரின் தனிச்செயலர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், நிதி/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி2)த் துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு1/சு2/பொது)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**